செ.வெ.எண்:16/ஆகஸ்ட் நாள்:18.08.2020

## இராமநாதபுரம் மாவட்டம்

## மானியத்தில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்கப்படவுள்ளன மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

விவசாயத்தில் வேலையாட்கள் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்து, குறித்த காலத்தே பண்ணைப்பயிர் சாகுபடி செய்திட ஏதுவாகவும், விவசாயிகளின் நிகர இலாபத்தினை உயர்த்திடவும் வேளாண்மை இயந்திரமயமாக்கும் திட்டம் தமிழகத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் பெருமளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் நடப்பு 2020-21-ஆம் நிதியாண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் தனிப்பட்ட விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்குதல், மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்கள் அமைத்தல் முதலான பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தில் டிராக்டர், பவர் டில்லர், பல்வேறு கலப்பைகள், விசைக் களையெடுப்பான், புதர் அகற்றும் கருவி, சுழற்கலப்பை, விதை விதைக்கும் கருவி, பல்வகைப் பயிர் கதிரடிக்கும் இயந்திரம், வைக்கோல் கட்டும் இயந்திரம் முதலான வேளாண் கருவிகள் வாங்குவதற்கு அவற்றின் மொத்த விலையில் 50 சதவிகிதம் அல்லது அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிகபட்ச மானியத் தொகை இவற்றில் எது குறைவோ, அத்தொகை மானியமாக சிறு, குறு, தாழ்த்தப்பட்ட பழங்குடியின மற்றும் பெண் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதர விவசாயிகளுக்கு அவற்றின் மொத்த விலையில் 40 சதவிகிதம் அல்லது அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிகபட்ச மானியத்தொகை, இவற்றில் எது குறைவோ, அத்தொகை மானியமாக வழங்கப்படும்.

வேளாண் இயந்திரங்களை மானியத்தில் பெற்றிட முதலாவதாக விவசாயிகள், உழவன் செயலியில் (Uzhavan App) பதிவு செய்திட வேண்டும். பின்னர் அவரது விண்ணப்பம் மத்திய அரசின் இணையதளமான "www.agrimachinery.nic.in"-ல் இணைக்கப்படும். விவசாயிகள் தங்களுக்குத் தேவைப்படும் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளையும் ஒப்புதல் வழங்கப்பட்ட முகவரையும் (Dealer) தங்களது சுயவிருப்பத்தின் அடிப்படையில் தேர்வு செய்யலாம். விவசாயிகள் முகவரின் விற்பனை விலையை பேச்சு வார்த்தை மூலம் பேரம் பேசி குறைத்திடலாம். குறிப்பிட்ட வேளாண் இயந்திரங்கள் / கருவிகளின் இலக்கு முடிவுற்ற பின்னர் விவசாயிகள் அதே இயந்திரம் அல்லது கருவியை தேர்வு செய்தால், அவர் 1, 2, 3 என எண்ணிடப்பட்டு காத்திருப்போர் பட்டியலில் சேர்க்கப்படுவர். ஏற்கனவே 2019-20ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மூதுரிமை விண்ணப்பங்கள் நடப்பு ஆண்டில் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. எனவே, இவ்வாண்டிற்கு விண்ணப்பங்கள் புதிதாக பதிவு செய்யப்பட வேண்டும். ஒரு நிதியாண்டில் தனக்குத் தேவைப்படும் ஏதாவது இரண்டு வேளாண் இயந்திரங்களை மட்டுமே மானிய விலையில் விவசாயிகள் வாங்கிட இயலும். அடுத்த 10 ஆண்டுகளுக்குப் பின்னர்தான் அதே வகையான வேளாண் இயந்திரங்களை மானிய விலையில் வாங்கிட இயலும்.

மேற்படி இணையதளத்தில் விவசாயி தனக்கு தேவையான வேளாண் இயந்திரங்கள் அல்லது கருவிகளின் முகவரை தேர்வு செய்திட வேண்டும். இவ்வாறாக 5 நாட்களுக்குள் உரிய முகவரை தேர்வு செய்யாத பட்சத்தில் அவரின் விண்ணப்பம் தானாகவே ரத்தாகிவிடும்.

உதவி செயற்பொறியாளர்(வே.பொ.), உதவிப் பொறியாளர்(வே.பொ.) / இளநிலை பொறியாளர்(வே.பொ.), ஆகியோர் விவசாயிகளின் நிலத்திற்கு நேரில் சென்று விவசாயிகள் வாங்கிய வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை ஆய்வு செய்வர். மேலும், விவசாயி மற்றும் விற்பனை செய்த முகவரால் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட அனைத்து விபரங்கள் மற்றும் ஆவணங்கள் வேளாண்மை பொறியியல் துறை அலுவலர்களால் சரிபார்க்கப்படும்.

மேலாய்வு செய்த அறிக்கை மற்றும் சரிபார்ப்புப் பட்டியல் (Check Slip) மற்றும் அலுவலரின் குறிப்புரையும் 10 நாட்களுக்குள் வேளாண்மை பொறியியல் துறை அலுவலர்களால் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். மேற்குறிப்பிட்ட ஆய்வுகள் அனைத்தும் முடிந்த பின்னர், இறுதியாக விவசாயியின் வங்கி கணக்கில் உரிய மானியமானது ஆய்வு முடிந்த 10 நாட்களுக்குள் வரவு வைக்கப்படும்.

விவசாயிகள், கிராமப்புற இளைஞர்கள் (தொழில் முனைவோர் சான்றிதழ் பெற்றிருப்பின்), விவசாய கூட்டுறவு சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், பஞ்சாயத்து குழுக்கள் போன்றோர் வட்டார அளவில் வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் மையங்களை ரூ.25 இலட்சம் மதிப்பில் அமைக்க 40% மானிய அடிப்படையில் அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படும்.

நடப்பாண்டில் 40 டிராக்டர்கள், 3 ரோட்டவேட்டர், 1 அறுவடை இயந்திரம் ஆகியவற்றை மானியத்தில் வாங்கிக் கொள்ள நடப்பாண்டில் ரூ.162.32 இலட்சங்களும், 1 வாடகை மையம் அமைக்க ரூ.10 இலட்சங்களும் இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தனிப்பட்ட விவசாயிகளுக்குரிய வேளாண் இயந்திரங்கள் வட்டார வாரியான இலக்கு வருகின்ற 21.08.2020 அன்று காலை 10 மணியளவில் www.agrimachinery.nic.in என்ற இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட உள்ளது. இதில் முன்னுரிமை அடிப்படையில் மானியம் வழங்கப்படுவதால், விவசாயிகள் தாமாகவே முன்வந்து முன்னுரிமை அடிப்படையில் பதிவு செய்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கொண்டு விவரங்கள் அறிய, இராமநாதபுரம் மாவட்ட வேளாண்மைப் பொறியியல் துறை, செயற்பொறியாளர் (தொலைபேசி எண்: 9443323374) அல்லது இராமநாதபுரம் மாவட்ட கருவூலக கட்டிடம் முதல் தளத்தில் அமைந்துள்ள உதவி செயற்பொறியாளர்(வே.பொ.) அலுவலகம் (தொலைபேசி எண்: 9566307888, 8220718779) அல்லது பரமக்குடி, கொல்லம்பட்டறை தெருவில் உள்ள உதவி செயற்பொறியாளர்(வே.பொ.) அலுவலகத்தை (தொலைபேசி எண்: 9486179544) தொடர்பு கொள்ளலாம் என்று

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**